10 காலணா Regd. No. M. 2811.

சுதந்திரச்சங்கு


“சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தரணிக் கெல்லா மெடுத்தோதுவோமே”

வாரம் மும்முறை வெளிவரும்
வருட சந்தா $4\frac{1}{2}$ ரூபா

ஆசிரியர் :
சங்கு ஸுப்ரஹ்மணியன்.

போன் நெ. 8088 பைக்ராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை. சனி 18-2-33

கடன்! கடன்! கடன்!



கிஸ்தி என்ற வேதாளம் நெருங்கி வந்துவிட்டது. ஏழை விவசாயிகள் இவ்வருடத்திய தீர்வையை எவ்வாறு செலுத்தப் போகிறோமென்று கலங்குகிறார்கள். மகா மேதாவியாகிய நன்னிலம் தாசில்தார் எல்லோருக்கும் ஓர் அபூர்வமான ஆலோசனை சொல்லித் தந்திருக்கின்றார். “உங்களுக்கு பணம் வேண்டுமோ? அப்படியானால் சௌகரியமாக உங்கள் நகைகளை இம்பீரியல் பாங்கியில் வைத்துக் கடன் வாங்கி கிஸ்தி செலுத்துங்கள்” என்று சொல்கிறார். “போன வருடத்திலேயே நகைகள் போய் விட்டனவே!” என்று குடியானவன் மனைவி கதறுகின்றாள்.

தாசில்தார் பிரசாரம்

தாசில்தார்கள் இப்போது பெரிய பிரசாரகர்களாக ஆகி விட்டார்கள். இனிமேல் சர்க்காருக்கு என்ன குறைச்சல்? நன்னிலம் தாலூகா தாசில்தார் பிரமாதமாக ஓர் விளம்பரம் செய்திருக்கிறாராம். கிராமத்துக்குக் கிராமம் அறிக்கைக் கடுதாசிகளை பறக்கவிட்டாராம். எங்கும் தமுக்கு போடவும் ஏற்பாடு செய்தாராம். இவ்வளவு சிரத்தையோடு ஒரு தாசில்தார் செய்த அரிய பிரசாரம் என்ன வென்பதை அறிய வாசகர்கள் விரும்புவார்களன்றோ!

"நாகப்பட்டணம் இம்பீரியல் பாங்கியில் நகைகளை அடகு வைத்தால் பணம் கிடைக்கும். காலை ரயிலில் நாகப்பட்டணத்திற்குப் போனால் பணத்தை 7 வட்டி. வீதம் வாங்கிக் கொண்டு மாலையிலேயே திரும்பி விடலாம். பவுன் எடைக்கு 12 ரூபாயிலிருந்து 13 ரூபாய் வரையிலும் கடன் கொடுக்க ஏற்பாடாகி யிருக்கிறது" என்று தாசில்தார் அவரது சுற்றறிக்கையில் கண்டிருக்கிறாராம். என்ன காருண்யம்! என்ன கரிசனம்! மிராசுதார்கள் கிஸ்திப் பணத்திற்கு வழியின்றி தவிக்கின்ற கோலத்தைப் பார்த்து, உள்ளம் கரைந்து, இந்த தாசில்தார் இந்த அபூர்வ ஆலோசனையை இலவசமாக (பீஸில்லாமல்) உலகுக்கு அறிவித்திருக்கின்றார் போலும்!

நகைகளைக் கொண்டு போய் ஸமர்ப்பித்தால் கடன் வாங்கலாமென்பது யாருக்காவது தெரியாத சமாசாரமா? அதற்கு ஒரு மகா மகா மேதாவியான ஒரு தாசில்தார் வந்து சொல்லிக் கொடுக்க வேண்டுமா? மிராசுதார்களுக்கு 'யுக்தி' சொல்லித்தர முற்பட்டுள்ள இந்த தாசில்தார் சர்க்காருக்கு யோசனை சொல்லட்டுமே. "கிஸ்திக்கு இனிமேல் நெல்லாக சர்க்கார் வாங்கிக்கொள்ள வேண்டும்" என்று சிபார்சு செய்யலாமே. இவரது போதனைக்கெல்லாம் இணங்குவதற்கு மிராசுதார் தானா அகப்பட்டான்?

மேற்படி அறிக்கையின் பயனாக தாசில்தார் அவரையு மறியாமல் ஓர் உண்மையைக் கக்கி விட்டார். "இந்த வருடம் கிஸ்தி கட்ட பெண்டாட்டியின் நகைகளை அடகு வைப்பதைத் தவிர வேறு வழியில்லை" என்ற உண்மையை அவரும் உணர்ந்திருக்கிறா ரென்பது ஏற்படுகிறது. இப்போது அந்தத் தாசில்தாருக்கும், அவருக்கு மேலேயுள்ள கலெக்டர், ரிவினியூ மெம்பர் எல்லோருக்கும் ஓர் யோசனை சொல்லித் தரலா மென்று நினைக்கிறோம். இனிமேல் மிராசுதார்களின் நிலங்களை யெல்லாம் இம்பீரியல் பாங்குக்காரர்களோ அல்லது சர்க்காரோ எடுத்துக் கொண்டு பயிரிட்டுக் கொள்ளட்டும். பட்டாக்காரனுடைய நிலத்தின் மதிப்பை யொட்டி 7 வட்டி வீதம் வருடா வருடம் தந்து கொண்டிருக்கட்டும். இந்த ஏற்பாட்டுக்கு அநேகமாக எல்லா மிராசுதார்களும் தயாரா யிருக்கிறார்களென்பதை நாம் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இது மோசடி யன்றோ!

இந்தியாவுக்குள் நுழையும் அந்நியச் சாமான்கள் எல்லாவற்றின் மீதும் அந்தந்த சாமான்கள் எந்தெந்த தேசத்தில் செய்யப் பட்டவை யென்று கண்டிருக்கவேண்டும். துறைமுகச் சட்டங்களும் இதை வற்புறுத்துகின்றன. ஆனால் இந்தியாவில் நுழைகின்ற சில துணி பீஸ்களின் ஓரத்தில், அவை எந்தெந்த தேசத்தில் செய்யப்பட்டவை யென்ற குறிப்பும், 'டிரேட் மார்க்' போன்ற குறிப்புகளும் போடப்படாமல் இறக்குமதி செய்யப் படுகின்றனவாம். இந்த மாதிரி கல்கத்தாவின் துறை முகத்தில் தான் விசேஷமாக 'அநாமதேய' துணி பீஸ்கள் இறக்குமதியாகின்றனவாம். இந்த இரகஸ்யத்தைக் கண்டு பிடித்து அஹமதாபாத் ஆலைச் சொந்தக்காரர்கள் துரைத்தனத்துக்கு ஓர் அறிக்கை அனுப்பி யிருக்கின்றனர்.

இம்மாதிரி நடப்பது வாஸ்தவமா யிருந்தால் இதை பலத்த மோசடி என்றே சொல்ல வேண்டும். சுதேசி வேகம் நாட்டில் ஏற்பட்டிருக்கும் இச் சமயத்தில் முத்திரைகளின்றி அந்நியத் துணிகள் நுழைந்து கொண்டிருக்குமானால் அதையும் சுதேசி யென்று பொய் சொல்லி விற்றுவிடுவதற்கு மானங்கெட்ட வர்த்தகர்கள் ஒரு சிலர் இருக்கின்றனர். கண்ட துணியை 'கதர்' என்று சொல்லி விற்றுவரும் மோசடியே போன்று சுதேசித்துணி தலையிலும் கைவைக்க சிலர் முயல்கின்றதை மண்டையிலடிக்க வேண்டாமா? சர்க்காரே! இந்த மோசடியைத் தடு!

அட! வழிப் பிள்ளையார்களே

சம்பளப் பணங்கள் உயர்ந்து விட்டதென்று சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் சந்தோஷப்படு கிறார்கள். நான்கு ரூபாயும், ஐந்து ரூபாயும் சம்பளத்தில் ஏற்ற மடைந்த சாதாரண குமாஸ் தாவை விட நூற்றுக் கணக்கிலும், ஆயிரக் கணக்கிலும் ஏற்ற மடைந்த கொழுத்த சம்ப ளக்காரர்களின் கொம்மாளம் சொல்லி முடி யாது. நாடு இப்போதுள்ள நிலைமையில், விவசாயிகள் வரிச் சுமையைத் தாள மாட்டாது கூக்குரலிடும் இத்தருணத்தில், வர்த்தகர்கள் 'வியாபாரம் படுத்துப் போச்சே' யென்று ஒப் பாரி வைக்கும் இந்நேரத்தில், திடீரென்று நூறும், ஆயிரமுமாக அள்ளிக் கொடுத்து ஒரு சிறிய கூட்டத்துக்கு சர்க்கார் சலுகை காட்டுவ தென்றால் அந்தச் செய்கை சகிக்க முடியாத தாக விருக்கின்றது. நிலத்திற்கும், நீருக்கு மென்று கண்டா கண்டபடி வசூல் செய்த தீர்வைப் பணத்தை இப்படி அள்ளிக் கொடுப் பதா? சுடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைத்த கதையாகவன்றோ இது இருக்கிறது!

உலகத்திலேயுள்ள எல்லா உத்தியோகஸ்தர் களையும் விட அதிகச் சம்பளம் வாங்குகின்ற 'வைஸ்ராய்' என்ற உத்தியோகஸ்தர், இந்தியா வில் தானிருக்கின்றார். உலகத்திலேயே மிக மிக ஏழையான ஜனங்கள் வசிப்பதும் 'இந்தியா' என்ற நாட்டில் தான். விஷயங்களை ஆர தீர ஆராய்ச்சி செய்தால் இப்போது இந்தியா வில் சம்பளங்களை உயர்த்தியது சர்க்காரின் மகா தப்பிதமான செய்கை என்பது புலனாகும்.

இந்திய சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் சம் பளங்களைப் பற்றி ப்ரொபஸர் காட்கில் என்ப வர் ஓர் புத்தகம் எழுதி யிருக்கிறார். அதில் அவர் 'எல்லாப் பெரிய உத்தியோகங்களையும் நிர்வகிக்க குறைந்த சம்பளங்களோடு இந்தியர் களையே நியமிக்கலாம்' என்று குறிப்பிட்டிருக் கிறார். ஆனால் அந்த ஆலோசனையை ஏற்றுக் கொள்ள பிரிட்டிஷ் சர்க்கார் தயாரா யில்லை. இங்கிலாந்தில் வேலை கிடைக்காமல் 'லாட்ரி' யடிக்கும் கூட்டத்திற்கு ஏகாதிபத்தியமத்தனை யையும் மேய்ச்சல் காடாக்கித் தந்திருக்கும் பிரிட்டிஷ் சர்க்காரா அவ்வாறு செய்வார்கள்?

உத்தியோகஸ்தர் சம்பளங்களையும், ஏழை இந்தியனின் சராசரி வருமானத்தையும் ஒப்பி டுங்கால் மலைக்கும் மடுவுக்குமாக இருக்கிறது. இதை மிஸ்டர் ராவ் என்பவர் வெகு தெளிவாக 'மராட்டா' பத்திரிகையில் எழுதினர். உதா ரணமாக பல நாடுகளோடு இந்தியாவையும் ஒப்பிட்டுப் பார்ப்போம்:

(எல்லாம் ரூபாய்க் கணக்கில் ஒரு வருடத்திற்கு)

நாடு	மனிதனின் சராசரி வருமானம்	நாட்டுப்புறத்தில் ஒருவனுக்கு கிடைக்கும் சராசரி கூலி	ஒரு குமாஸ்தாவுக்கு கிடைக்கும் குறைந்த சம்பளம்	பெரிய 'ஆபீஸ'ருக்கு கிடைக்கும் சம்பளம்
தென்னாப்பிரிக்கா	—	——	1866	21333
பிரிட்டனில்	1240	1333	2266	40000
கானடாவில்	1420	2620	1650	27400
ஐக்ய அமெரிக்கா	1850	2950	3125	27400
ஜர்மனியில்	520	1140	1110	14960
ஜப்பானில்	295	575	650	8800
இந்தியாவிலோ	74	240	360	48000

இந்தப் புள்ளி விவரங்கள் நமது கண்களைத் திறந்தே தீரும். மனிதன் நன்றாகச் சம்பாதிக் கும் பிரிட்டனிலோ தொழிலாளியின் சராசரி வருமானத்தை விட 30 பங்கே பெரிய ஆபிசர் வாங்குகின்றான். சாதாரண மனிதனின் கூலிக்குச் சமானமாகவே சர்க்கார் குமாஸ்தா வுக்கும் கிடைக்கிறது. ஆகவே சர்க்கார் உத்தி யோகத்திற்கென்று ஆசைப்படுபவர்கள் அந் நாட்டில் குறைவாக இருக்கிறார்கள்.

ஆனால் இந்தியாவிலோ எல்லாம் நேர் மாறா யிருக்கிறது. புள்ளி விவரப்படி இந்த ஏழை நாட்டில்தான் கொழுத்த சம்பளங்கள் கொடுக் கப்படுகின்றன. ஒருவன் வருடந் தோறும் கூலி வேலை செய்து 240 ரூபாய்தான் சம்பா திக்கின்றான்; அதே வருடத்தில் பெரிய சம்ப ளக்காரன் 48 ஆயிரம் ரூபாயை அள்ளிக் கொண்டு போய் விடுகின்றான். தொழிலாளி யின் சம்பளத்தைப் போல 200 பங்கு ஒருவன் அள்ளிக் கொள்கின்றான். என்ன அநியாயம்! நாடு தரித்திர தசையின் உச்சத்திலிருக்கும் போதா சம்பளங்களையும் உயர்த்துவது? அட அக்ரமமமே! காங்கிரஸ் மகா சபை சொன்ன தைப் போல இந்தியாவில் எந்தப் பெரிய சம்ப ளக்காரனும் 500 ரூபாய்க்கு மேல் வாங்கலா காது என்று அரசு முறையில் மாறுதல் என் றைக்கு வருகின்றதோ அன்றுதான் ஊருக்கு க்ஷேமம்; வரிச் சுமையும் அப்போது தான் குறைவிடையும்!

ஒண்ட வந்த பிடாரி

‘ஒண்ட வந்த பிடாரி ஊர்ப் பிடாரியை விரட்டிற்றாம்’ என்று ஓர் பழமொழி உண்டு. ‘இடத்தைக் கொடுத்தால் மடத்தையே சாஸனம் செய்து கொள்ளும்’ கோஷ்டி உலகில் எப்போதும் உண்டு. அரேபியப் பாலைவனத்தில் சுழற் காற்று அடித்த சமயத்தில் கூடாரத்துக்குள் மூக்கை மட்டும் நுழைத்த ஓர் ஒட்டகம், பிறகு கூடாரத்துக்குள்ளேயே நுழைந்து சொந்தக்காரனை வெருட்டி விட்டதாக மற்றொரு கதை உண்டு. இந்தக் கதையை யெல்லாம் தோற்கடிக்க தென்னாப்பிரிக்காவில் ஒருவர் தோன்றியுள்ளார்.

அவரது பெயர் டீல்மன்ருஸ். வர வர அவர் ஆசைக்கு அளவே யில்லை போலிருக்கிறது. தென்னாப்பிரிக்கா முழுவதையும் வெள்ளைக்காரமயமாக்கி விட வேண்டு மென்று அவர் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறாராம். ஜோஹானெஸ்பர்க்கில் ஒரு கூட்டத்தில் அவர் பேசிய போது “எல்லாத் தொழிற்சாலைகளிலும் இனி நூற்றுக்கு எழுபது பேர் விதம் வெள்ளையர்களையே நியமிக்க வேண்டு மென்று சட்ட ரீதியாக வற்புறுத்த வேண்டும். எந்தத் தொழிற்சாலையிலும் வெள்ளையர்களோடு கறுப்பர்களைக் கலந்து வைக்காதிருக்கவும் சட்டங்கள் செய்ய வேண்டும்” என்று கூறினார்.

தென்னாப்பிரிக்கா கறுப்பர்களின் தேசம் நீக்ரோவர்களின் நாடு. அங்கு டில் மன்ராஸின் முதாதையர் ஆப்பிரிக்காவில் ஒண்ட வந்தவர்களேயன்றி வேறில்லை. ஒண்ட வந்த ஜாதியார் ஊர் ஜாதியாரைத் துவைக்கும் அநீதிக்கு தென்னாப்பிரிக்கா அரசாங்கமே சமீபகால உதாரணம்.

அமெரிக்காவில் சென்று ஆங்கிருந்த சிகப்பு இந்திய ஜாதியார்கள் குறையும்படி செய்ததும், ஆஸ்திரேலியாவில் ‘புஷ்மன்’ என்ற சுதேசிகள் மறையும்படி செய்ததும் பழங் கதைகள். ஆனால் தென்னாப்பிரிக்கா சம்பந்தப்பட்ட வரையில் பார்த்தால் இன்னும் சில வருஷங்களுக்குள் கறுப்பு ஜாதியே இல்லாதவாறு செய்து விடுவார்கள் போலிருக்கிறது. ஆங்குள்ள ‘ஜூலு’க்களைக் குறைத்தாகி விட்டது. இந்தியர்களை விரட்டவும் ஏற்பாடுகள் செய்து விட்டனர். டீல்மான்ருஸும் திமிரோடு பேசத் தொடங்கி விட்டார். இப்படி கறுப்பர்களை ஒழிப்பதே மோக்ஷ மென்று நினைத்துக்கொண்டிருப்பவர்களை எதிர்க்க ஆப்பிரிக்காவில் மற்றொரு காந்திஜி தோன்றலாகாதா?

குறும்புப் பிரசாரம்

தேசத்துக்கு அவசியமான காரியங்களைத் தாங்களும் செய்ய மாட்டார்கள். பிறரையும் செய்ய விட மாட்டார்கள். அப்பேர்ப்பட்ட முட்டுக் கட்டைகளாக யதாபூர்விகள் இருக்கின்றனர். ஹரி ஜன ஆலயப் பிரவேச இயக்கத்தை எதிர்ப்பதற்கு இந்தக் கூட்டம் செய்கின்ற பிரசார முறைகள் வர வர குறும்பு மிகுந்ததாகி விட்டது. நாக்கில் சிறிதேனும் நரம்பின்றி கும்பகோணத்தில் ஒருவர் காந்திஜியைத் திட்டினாராம். ஸ்ரீரங்கத்தில் இன்னொரு பேர்வழி “நந்தனார் கதை, பாணாழ்வார் கதை இவைகளெல்லாம் வெறும் கற்பனைக் கதைகள்” என்று வாய் கூசாது சொன்னாராம். மதுரையில் இன்னொருவர், “என்றைக்கு தேவஸ்தானக் கமிட்டிக்கு இந்த காந்தி கோஷ்டி தேர்ந்தெடுக்கப்பட்டதோ அன்றைக்கே அம்மன், கோயிலை விட்டுப் போய் விட்டாள்” என்று சொன்னாராம். அது வாஸ்தவமாயின் அந்தக் கோயில் விஷயத்தில் இனி யதாபூர்விகள் சிரத்தை காட்டுவானேன்?

காந்தீயத்தை எந்தக் காலத்திலும், எந்தத் துறையிலும் எதிர்த்துக் கொண்டே யிருப்பதென்ற நோக்கமுடைய ‘பென்ஷன்’ கூட்டமொன்று தென்னாட்டில் உண்டு. இந்தக் கூட்டம் அங்கு மிங்கும் சில நகரங்களில் துள்ளிக் குதித்துக் கொண்டிருக்கிறது.

வாஸ்தவமான ஸனாதன தர்மிகளுக்கு நாட்டில் எப்போதும் வேலை யிருந்து கொண்டே யிருக்கும். நதியாதில் 54 வயதுக் கிழவனொருவன் 7 வயதுப் பெண்ணைக் கலியாணம் செய்து கொள்ள ஏற்பாடு செய்தான். அக் கலியாணத்தை ‘சாஸ்வத தர்மிகள்’ ஆதரித்தனர். ஆனால் அக் கலியாணத்தை ஜில்லா மாஜிஸ்திரேட்டு வந்து நிறுத்த வேண்டி வந்தது. அதே மாதிரி பல இடங்களில் இத்தகைய அநியாய வயது விவாகங்கள் நடைபெறுவதை எதிர்த்துப் பிரசாரம் செய்யவும், வரதக்ஷிணைப் பேயை வெருட்ட பிரசாரம் செய்யவும், ஒரு யதா பூர்வியாவது முற்பட்டதாகத் தெரியவில்லை. எல்லா ஊர்க் குருவிகளும் காந்தி இயக்கத்தை வைவதிலேயே நோக்கமாக இருக்கின்றனவே யன்றி வேறு விஷயங்களைப் பொருட்படுத்துவதில்லை. எக்கேடு கெட்டாலும் பிரசாரத்தில் இவர்கள் இறங்க, இறங்க தங்கள் சாயம் நிறம் குறைந்து வருகிறதைக் கவனிக்கிறார்களில்லை. ஐயோ பாவம்!

அம்பேத்கருக்கு மகாத்மா பதில்

[கோயிலுக்குச் செல்பவர்களில் பெரும்பாலாரின் தீர்ப்பை யொட்டி கோயில்கள் ஹரி ஜனங்களுக்குத் திறக்கப்படுவதில் அதிருப்தி காட்டியும், ரங்கய்யரின் மசோதாக்கள் தீண்டாமையை ஒரு பாபமாகச் செய்யவில்லை என்றும், தீண்டாமையை அனுஷ்டிப்பதையே அச்சட்டம் தடை செய்யவில்லை என்று கூறியும், தீண்டாமையை வளர்த்து வரும் வர்ணாசிரம முறையை யொழிக்க மகாத்மா முன் வருவாரா என்று கேட்டும், சமீபத்தில் அம்பேத்கர் வெளியிட்ட அறிக்கைக்கு மகாத்மாஜி பின்வருமாறு பதிலளித்திருக்கிறார்.]

ஹிந்து மதத்தில் புகுந்துள்ள உயர்வு, தாழ்வு என்ற எண்ணங்களை யொழிக்க அம்பேத்கருடன் தோளுக்குத் தோள் நிற்க நான் தயார். ஆனால் வர்ணாசிரம தர்மத்தையே எதிர்க்க வேண்டுமென அம்பேத்கர் விரும்புகிறார். இவ் விஷயத்தில் நான் அவர் கக்ஷியில் சேர முடியாது. ஏனெனில் வர்ணாசிரமம் ஹிந்து மதத்துடன் பிறந்ததென்பது என்னுடைய கொள்கை.

கோபத்தையும், மனக் கசப்பையும் உதறியெறிந்து விட்டு, நம்முடைய முன்னோர்கள் வகுத்த ஒரு தர்மத்தின் அழகைக் கண்டறியுமாறு நான் அம்பேத்கரை அழைக்கிறேன். ஜாதி ஹிந்துக்களை அவர் எவ்வளவு வேண்டுமானாலும் திட்டிக் கொள்ளட்டும்; ஆனால், களங்கமற்ற முறையில் ஹிந்து மதத்தைப் பற்றி நன்கு ஆராய்ந்தறியாமல் அதை அவர் திட்ட வேண்டாம்.

இனிமேல் கோயில் பிரவேச விஷயத்தைக் கவனிப்போம். இதில் ஹரி ஜனங்கள் பிச்சைக்காரர்களின் நிலையிலிருக்க முடியாது, இருக்கவும் கூடாது என்பதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். ஜாதி ஹிந்துக்கள் தாமாகவே மனமிளகி அவர்களுக்குக் கோயில்களைத் திறந்து விட வேண்டும், அல்லது பேசாமலிருக்க வேண்டும். இது ஹரி ஜனங்களுக்கு ஜாதி ஹிந்துக்கள் செய்யவேண்டிய கடமை என்பதை மீண்டும் சொல்வேன்.

கோயில் பிரவேச மசோதாவை அம்பேத்கர் குறை கூறி யுள்ளார். ஜாதி ஹிந்துக்களின் உணர்ச்சியைக் கண்டறியவே இம் மசோதா வகுக்கப்பட்டது. பெரும்பான்மையோரின் ஹிருதயங்கள் மாறுதலடைந்துள்ள இடங்களில் கோயில்கள் திறந்து விடப்படும். பலவந்தமாகக் கோயில்கள் திறக்கப்படுவதை அம்பேத்கர் விரும்ப மாட்டார் என நினைக்கிறேன். ஜாதி ஹிந்துக்களில் பெரும்பாலார் இன்று ஹரி ஜனங்களுக்குக் கோயில்களைத் திறந்து விடத் தயாராகவில்லை என அம்பேத்கர் எண்ணுகிறார். நான் அவ்விதம் எண்ணவில்லை. அம்பேத்கர் இகழ்ந்து பேசினால் கூட குருவாயூர் வாக்கு இதனை நன்கு ருசுப்பிக்கின்றது. ஜாதி ஹிந்துக்களின் மன மாற்றத்தையே அது காட்டுகின்றது. சமீபத்தில் வெளியான மதுரை வெகு ஜன வாக்கும் அதையே நிரூபிக்கின்றது.

தஞ்சையும், கஞ்சாவும்

தஞ்சை ஜில்லாவின் கள்ளுக்கடை ஏலத்தைப் பற்றி முன்பு ஒரு தடவை எழுதியது 'சங்கு' வாசகர்களுக்கு ஞாபகமிருக்கும்.

இப்பொழுது சாராயம், அபின், கஞ்சா, சீமைச் சாராயக் கடைகள் ஏலத்தில் விடப்பட்டிருக்கின்றன. சென்ற வருஷத்திய வருமானம் 56,592 ரூ. இவ்வருஷத்திய வருமானம் 57,756 ரூ. இவற்றுடன், கள்ளுக் கடை ஏலத்தில் கிடைத்த தொகையையும் சேர்த்தால் மேற்படி ஜில்லாவிற்கு குடியினால் ஜாஸ்தி வருமானமா அல்லது ரெவினியூவினால் அதிக வருமானமா என்பது புரிந்து விடுமல்லவா? வரவர வறுமை மிகுந்து வரும் தஞ்சை ஜில்லாவில் கள்ளு குடிக்கவும், கஞ்சாவைக் குடிக்கவும் காசு எங்கிருந்து தான் கிடைக்கின்றதோ?

ரயில்வே வருமானத்தில் 'டொக்கு'

இந்தியாவில் ஓடும் ரயில்வேக்களின் வரவு எவ்வளவு, செலவு எவ்வளவு, லாபம் எவ்வளவு, நஷ்டம் எவ்வளவு என்ற கணக்குகளை ரயில்வே போர்டார் வெளியிடுவது வருஷ சம்பிரதாயம். இதை யொட்டியே, 1932-௵ மார்ச்சு-௴ 31௳ யுடன் முடிவான ஒரு வருஷத்திய கணக்கு இப்பொழுது வெளியிடப் பட்டிருக்கின்றது. வியாபாரத் துறையில் தேசத்தில் ஏற்பட்டிருந்த மந்தத்தால் ரயில்வேக்களின் வருமானம் எவ்வளவு தூரத்திற்குப் பாதக மடைந்திருக்கின்ற தென்பதை அப் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன.

ராஜிய நிலைமையிலுள்ள கொந்தளிப்பு காரணமாகவே இவ் வியாபாரச் சுணக்கம் ஏற்பட்டிருந்த தென்று ரயில்வே போர்டு அபிப்பிராயப் படுகின்றது. பிரஸ்தாப ௵த்தில் சர்க்கார் நிர்வாகத்திற்கு உட்பட்ட ரயில்வேக்களின் மொத்த வருமானத்தில் 8½ கோடி ரூபாய் குறைந்து விட்டது. இவ் வருமானக் குறைவுக்கு நாளுக்கு நாள் அதிகரித்து வரும் மோட்டார் போட்டியும் காரண மெனப்படுகிறது.

இந்தியாவிலுள்ள எல்லா ரயில்வேக்களுக்குமாகச் சேர்ந்து கிடைத்த மொத்த வருமானம் 97¼ கோடி ரூபாய். இதில் 58¾ கோடி ரூ. சாமான்கள் போக்குவரத்து மூலமாகக் கிடைத்தது; 31¼ கோடி பிரயாணிகளிடமிருந்து கிடைத்தது. பார்ஸல்கள், லக்கேஜ் முதலியவற்றால் கிடைத்த வருமானம் 7 கோடி. 1930-31-ம் ௵த்தில் பிரயாணிகள் மூலமாகக் கிடைத்த வருமானம் 34¼ கோடி ரூபாய்; 1931-32-லோ 31¼-தான்; அதாவது 3 கோடி குறைவு.

பிரஸ்தாப ௵த்தில் மொத்த ரயில்வே வரவு செலவில் 'டொக்கு' விழுந்த தொகை 9·20 கோடி ரூபாய்; அதாவது 1930-31-ல் ஏற்பட்ட குறைவை விட 4 கோடி இன்னும் அதிகக் குறைவு. ரயில்வே வருமானம் வட்டிக்குக் கூட கட்டி வரவில்லை. கையில் காசுத் தென்பில்லாததால் ஜனங்கள் அதிகமாகப் பிரயாணம் செய்ய வில்லை என்று ரயில்வே போர்டு சொல்கிறது.

சாமான்கள் போக்கு வரத்தில் ஏற்பட்ட குறைவு 5·68 கோடி. முக்கியமாக பருத்தி, நிலக் கரி இவற்றின் போக்கு வரத்து வெகுவாகக் குறைந்து விட்டதாம்.

"படித்துக் கிழிப்பவர்களே!"

பரிதாபம்! பரிதாபம்! வேலை ஏதும் கிடைக்காது திண்டாடும் இளைஞர்களைக் காணும் போது மகா பரிதாபமா யிருக்கிறது. இரவும் பகலும் கண்ணை விழித்துப் படித்ததில் குறைவா? பாஸ் பண்ணியதில் குறைவா? பட்டம் பெற்றதும் பொய்யா? பத்திரிகைகளில் 'தேவை' என்று போட்டிருக்கும் விளம்பரங்களைத் துருவித் துருவிப் பார்ப்பதும் பொய்யா? விண்ணப்பம் போடுவதில் குறைவா? வேலையில்லாது அலைவது தான் நேருக்கு நேரே காணும் பலனாக இருக்கின்றது. ஒரே ஒரு உதாரணம் தருகின்றோம்.

சில காலத்துக்கு முன்னே சென்னை யூனிவர்ஸிடியில் 23 ரூபா சம்பளத்தில் ஓர் அட்டெண்டர் உத்யோகம் காலி யிருப்பதாக விளம்பரம் செய்தார்கள். அந்த ஒற்றை உத்யோகத்துக்கு 975 பேர் அப்ளிகேஷன் போட்டார்களாம். போட்டவர்களில் இருவர் ஹானர்ஸ் பட்டம் பெற்றவர்களாம்; 20 பேர் பி.ஏக்களாம்; 6 பேர் பி. எல். பட்டமும் வாங்கினவர்களாம். எந்த ஸர்வ கலாசாலையில் காசைத் தாராளமாகக் கொட்டிப் படித்தார்களோ அதே ஸர்வ கலாசாலையின் வாசலில் சென்று இத்தனை பேர்களும் போதிக் கொண்ட கதை பரிதாபமானது.

இந்த வேலை யில்லாத் திண்டாட்டத்தின் கூற்று கொஞ்ச நஞ்சமன்று. எவ்வளவு இளைஞர்கள் இந்தத் துன்பத்துக்கு ஆற்றாமல் தற்கொலை செய்து கொள்கிறார்கள் தெரியுமா? சமீபத்தில் பம்பாயில் ஓர் நிகழ்ச்சி நடந்திருக்கிறது. அர்ஜுன் தலேகர் என்ற வாலிபன் பற்பல இடங்களில் அலைந்தும் வேலை ஏதும் கிடைக்காது போகவே ரயில் வண்டியின் முன் விழுந்து பிராணனை விட்டு விட்டானாம். என்ன அநியாயச் சாவு! இந்தச் செய்தியைக் கேட்ட போது நெஞ்சு திடுக்கிடுகின்றது. இத்தகைய சாவுகளுக்கு யார் பொறுப்பாளி? காசை ஓயாது இறுக்கி இறுக்கி முடிந்து கொண்டிருக்கும் முதலாளிகளைக் குறை சொல்வதா? கொழுத்த சம்பளங்களை ஏதோ சில பேருக்கு மட்டும் தந்து கொண்டிருக்கும் சர்க்காரைக் குறை சொல்வதா? அல்லது வருடந் தவறாமல் பேனு ஓட்டும் மெஷின்களைத் தயார் செய்து கொண்டிருக்கும் கலா சாலையைச் சொல்வதா? எப்படியாயினும் அனைவரும் சேர்ந்து இத் தொல்லையை நிவர்த்திக்க வழிகளைக் கண்டு பிடித்தே தீர வேண்டு மன்றோ?

ஸப்ரூ பின் புத்தி

கர்வம், திமிர், வறட்டு ஜம்பம் முதலிய காரணங்களால் தற்போதுள்ள அரசு முறை தன் விரோதிகளின் தொகையைத் தன்னுடைய செயல்களாலேயே அதிகமாக்கிக் கொண்டு வருகின்றது. உதாரணமாக மூன்று மாதங்களுக்கு முன் வட்ட மேஜைக்கு விழுந்தடித்துக் கொண்டு ஓடிய ஸப்ரூ, ஸர் ஸாம்யூ லுடன் கட்டிப் புரண்ட ஸப்ரூ, பிரிட்டிஷ் துரைத்தனத்தை வான மளாவப் புகழ்ந்து பேசிய ஸப்ரூ, இன்று வெறுப்படைந்து, "சே! இதுவும் ஒரு அரசாங்கமா!" என்று சொல்லும் உணர்ச்சியைப் பெற்று விட்டார். மகாத்மா விடுதலை விஷயத்தில் ஹோர் அளித்த பிடிவாதமான பதில் ஸப்ரூவின் மனத்தையும் தைத்து விட்டது.

"மீண்டும் சட்ட மறுப்பு துவக்கப்படாது என்பதற்குப் போதுமான, திருப்திகரமான காணங்கள் ஏற்பட்டலல்லாது காந்திஜிக்கு விடுதலையில்லை' என்கிறார் ஹோர். காரணங்களைக் காட்டுவது யார்? தாம் நல்லபடி நடந்துகொள்வதாக மகாத்மா காந்தி இப்பொழுதோ, அல்லது எந்தக் காலத்திலோ சர்க்கார் முன்பு சொல்லிக் கொள்வார் என அவர்கள் எதிர் பார்த்தால் அவர்கள் ராஜீய நிலைமையை, ராஜீய முறையில் தீர்க்க முற்படவில்லை என்று தான் நான் சொல்வேன். விசாரணை யில்லாமல் காந்தியை எத்தனை நாளைக்குச் சிறையில் பூட்டி வைத்திருக்க முடியும்? எவ்வளவு காலத்திற்கு உலக அபிப்பிராயத்தை மிதித்துத் துவைக்க முடியும்?" என்று கேட்கின்றார் ஸப்ரூ. ஆனால் இந்த புத்தி வட்ட மேஜைக்குப் போவதற்கு முன் எங்கு போயிருந்ததோ?

"வட்ட மேஜைகளெல்லாம் ஸைபர்தான். அவை எல்லாம் இந்தியரைப் பிடித்துப்போட ஏற்பட்ட கூண்டே தவிர வேறில்லை" என்கிறார் அந்த மகா நாட்டில் ஒரு காலத்தில் குந்தியிருந்த மகமத் ஆலி ஜின்னாவும். அவருடைய பின் புத்தியை விடக் கேவலமாக இருக்கிறது ஒரே ஒருவருடைய புத்தி. அவர்தான் பரசுராம பாத்ரோ! அவர் இன்னும் புதிய சீர் திருத்தத்தைப் புகழ்ந்து சந்திலும் பொந்திலும் மீட்டிங் பேசுவது தான் வேடிக்கையாயிருக்கிறது. இந்த மிதவாத மகான்களும், குலாம் கூட்டத்தினரும் சும்மா யிருப்பார்களானால் அதுவே நன்மை பயக்குமென்று நாம் கருதுகிறோம்.

இரத்தக் களறி ஓயாதோ!

கிழக்கே சீனாவுக்கும் ஜப்பானுக்கும் மூண்டுள்ள யுத்தம் இலேசில் சமாதானமாகாது போலிருக்கிறது. இந்தச் சச்சரவு எப்படி தொடங்கிற்று, எவ்வாறு வளர்ந்தது என்பதை சுருக்கமாகச் சொல்ல விரும்புகின்றோம்.

சீனா தேசத்தில் 'மஞ்சூரியா' என்பது ஓர் பாகம். மஞ்சூரியாவுக்குப் பக்கத்தில் தான் ஜப்பானியத் தீவுகள் இருக்கின்றன. ஏகாதிபத்தியங்களுக்குப் பேராசை பிடிப்பது சகஜமல்லவா? அந்த மாதிரி ஜப்பானுக்கும் மஞ்சூரியா மீது ஓர் கண் விழுந்தது. ஆகவே 1931-ம் வருஷம் செப்டம்பர் மீ 19ம் தேதி இரவில் மஞ்சூரியாவில் சீனத் துருப்புகளுக்கும் ஜப்பானியத் துருப்புகளுக்கும் கொஞ்சம் 'லடாய்' ஏற்பட்டது. 'தென் மஞ்சூரியா ரெயில்வே' என்ற ரெயில்வே ஜப்பானுடைய சொத்தாகும். அதில் யாரோ வெடிகுண்டு வைத்து சில இடங்களைத் தகர்த்து விட்டதாகவும், ஆகவே அந்த ரயில் பாதையைக் காப்பதற்காக வென்றும் ஜப்பான் தனது துருப்புகளை முதலில் உள்ளே நுழைத்தது.

ஸர்வ தேச சங்கம் என்று ஓர் சங்கம் இருக்கிறதே, அதில் சீனாவும் ஜப்பானும் அங்கத்தினர்கள் ஆவார்கள். ஆகவே சங்க நடவடிக்கைப் படி இந்த யுத்தத்தை ஆராய்ச்சி செய்ய மேற்படி சங்கம் முற்பட்டது. 1932ம் ஜனவரி மீ லார்ட் லிட்டன் பிரபுவின் தலைமையில் ஓர் பஞ்சாயத்தை நியமத்து ஆராய்ச்சி செய்ய அனுப்பிற்று. அந்தப் பஞ்சாயத்தார் அக்டோபர் மாதத்தில் தங்கள் முடிவுகளைத் தெரிவித்தார்கள்.

ஆனால் இதற் கிடையிலேயே ஜப்பான் கொஞ்சம் கொஞ்சமாக மஞ்சூரியா முழுதும் தன் படைகளைக் கொண்டு நிரப்பியது மன்றி மஞ்சூரியாவுக்கென்று ஒரு தனி அரசாங்கத்தையும் சிருட்டி செய்து விட்டது. 'மஞ்சுகோ' என்று அந்த சிருட்டிக்குப் பெயரு மிட்டது. இந்த அநியாயத்தை எதிர்த்து சீனா சர்வ தேச சங்கத்திடம் முறையிட்டது. அப்போது தனது வழக்கம் போல ஷை சங்கம் 19 பேரடங்கிய ஓர் கமிட்டியை நியமித்து இந்தத் தகராரைத் தீர்த்து வைப்பதென்று முடிவு செய்தது. அக்கமிட்டியும் இப்போது சுழித்து விட்டது.

சர்வ தேச சங்கத்தினின்று விலகிக்கொள்வதென்று ஜப்பான் முடிவு செய்து விட்டதாம். ஆகவே இனிமேல் என்னவாகுமோ?

நமது கிளிஞ்சல் குவியல்

சென்னை ஹைக்கோர்ட்டில் ஜனவரி 26-ல் யூனியன் ஜாக் கொடியை திக்கிரையாக்கினதாக குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கில் ஒருவருக்கு மூன்று மாதம். இன்னொருவருக்கு ஆறு மாதத்துக்கு ஜாமீன். இம்மாதம் 11ம் தேதி துண்டுப் பிரசுரம் வழங்கியதற்காக இரு தொண்டர்களுக்கு தலா 3 மாதம்.

சென்னை சட்ட சபையில் 26-1-33ல் பட்டாஸ் வெடிக்கச் செய்ததற்காக நால்வருக்கு தலா 3 மாதமும் 100 ரூ. அபராதமும்.

கள்ளிக்கோட்டையில் கேரள தினம் கொண்டாடி, விதேசி ஜவுளிக்கடையை மறியல் செய்த 15 பேர்களும் கைதியாயினர்.

ஆமதாபாத்தில் "சுதர்சனம்" என்ற பத்திரிகைக்கும் அச்சாபீஸைத்துக்கும், அச்சுச் சட்டப்படி 6,000 ரூ. ஜாமீன் கேட்கப்பட்டிருக்கிறது.

லக்ஷ்மணபுரியில் ஜில்லா காங்கிரஸ் கமிட்டியைத் திறக்க முயலுகையில் கைது செய்யப்பட்ட 14 பேருக்கு தலா ஒரு வருஷம்.

கல்கத்தாவில் ஊர்வலம் நடத்தி, சட்ட விரோதமான கூட்டத்தில் மெம்பர்களாக இருந்ததற்காக 6 பேருக்கு தலா 6 மாதம்.

டெல்லி சட்ட சபையில் ஸ்ரீரங்கய்யரால் கொண்டு வரப்பட்டிருக்கும் ஆலயப் பிரவேச மசோதாவை ஆதரித்தும் எல்லாக் கோயில்களையும் ஹரிஜனங்களுக்குத் திறந்துவிட வேண்டும் என்றும் கல்கத்தாவில் உள்ள பிரபலஸ்தர்களால் தீர்மானம் செய்யப் பட்டிருக்கிறது.

டெல்லியில் காந்தி தினத்தன்று கைது செய்யப்பட்ட மூவரில் இருவருக்கு மூன்று மாதமும் 50 ரூ. அபராதமும்.

கொடுமுடியில் ஒரு ஹரிஜனப் பள்ளிக்கூடம் ஏற்படுத்தி, அதில் 30 பேர்கள் வரையில் படிக்கின்றனராம்.

தன் அதிகாரத்திற்குட்பட்ட எல்லா பெண் பள்ளிக் கூடங்களிலும் 2-வது வகுப்பிலிருந்து எல்லா பெண்களுக்கும் நூல் நூற்றலைக் கற்றுக் கொடுப்பதென்று கோயமுத்தூர் முனிசிபாலிடி தீர்மானித்திருக்கிறது. மேலும், உள்ளூர் ஹிந்தி சபைக்கு முனிசிபாலிடி ரூ. 100 சாங்ஷன் செய்தது.

நெல்லூருக்கடுத்த கோவூர் தாலுகா போர்டு, ஹரி ஜனங்களுக்காகத் தனிப் பள்ளிக் கூடங்களிருப்பதை ஒழித்து விடுவதென்றும், போர்டு தேவைகளுக்கு சுதேசி சாமான்களையே வாங்குவதென்றும் தீர்மானித்துள்ளது.

கடந்த வியாழனன்று கூடிய டில்லி சட்ட சபையில் 1932-33ம் வருஷத்திய ரயில்வே வரவு செலவு திட்டம் ஆஜர் படுத்தப்பட்டது. இந்த வருஷத்தில் 9 கோடியே 34 லக்ஷம் ரூபாய்க்குத் துண்டு விழுந்திருக்கிறது. 1933-34 வருஷத்துக்கு 7 கோடியே 77 லக்ஷம் ரூபாய் துண்டு விழுமென எதிர் பார்க்கப்படுகிறது.

விவசாயிகளின் நிலைமை அதோ கதியாயிருப்பதன் காரணமாக கிஸ்தியில் ¼ பங்கைக் குறைக்க வேண்டுமெனக் கோரி சர்க்காருக்கு மகஜர் அனுப்புவதென மதுரை ஜில்லா ரயத்துகள் சங்கம் தீர்மானித்துளது.

பர்மிய நெல் விலையை உயர்த்துவதற்காக அன்னிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கு இறக்குமதி வரி போட வேண்டுமென்று பர்மா சட்ட சபையில் தீர்மானம் செய்யப்பட்டது.

பம்பாய் கவர்ன்மெண்டார் கசையடி கொடுப்பதை சட்டமாக்குவதைக் கண்டித்து லண்டனில் ஒருவர் பேசியிருக்கிறார்.

சீன—ஜப்பான் தகராறு சர்வ தேச சங்க ஆலோசனையிலிருக்கிறது. அதற்குள் ஜப்பான் சீனவுக்கு 3 எச்சரிக்கைகள் அனுப்பி யிருக்கிறது. அநேகமாக இம்மாதம் 25-ல் யுத்தம் தொடங்கப்படலாம்.

சமீபத்தில் நடைபெற விருக்கும் காங்கிரஸ் மகா சபையின் கூட்டத்தை அநுமதிக்க சர்க்காருக்கு உத்தேசமா அல்லது தடுக்க எண்ணமா என்றும், காங்கிரஸ் நடவடிக்கைகளில் தாங்கள் எவ்விதத்திலும் தலையிட மாட்டார்கள் என்று உறுதி கூற முடியுமா என்றும். டெல்லி சபையில் ஒரு கேள்வி கேட்கப் போவதாக ஒரு அங்கத்தினர் அறிவித்திருக்கிறார்.

அமெரிக்காவின் புதிய தலைவரான ரூஸ்வெல்ட் பத்தாயிரம் பேர்களடங்கிய கூட்டத்தில் பேசி விட்டு உட்காரும்போது 5 தடவை சுடப்பட்டார். ஆனல் அவர் காய மேற்படாமலேயே தப்பினர்.

Edited and Published by S. Subramaniam and
Printed by M. R Seshan, at the Lunar Printing Press, Triplicane, Madras